## சத்தாய் நிஷ்களமாய்

சத்தாய் நிஷ்களமாய்
ஒரு சாமிய மும் இலதாய்
சித்தாய் ஆனந்தமாய்த்
திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நானடியேன்
கடைத்தேறுவன் என் பாவந் தீர்ந்து
அத்தா, உன்னையல்லால்
எனக்கார் துணை, யாருறவே

திரைசேர் வெம்பவமாம் கடல்
மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே
புணையாயினை கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலேன்
என்னைப் பற்றிய பற்றுவிடாய்
அரசே உன்னையல்லால்
எனக்கார்துணை யாருறவே

தாயே தந்தை தமர் குரு
சம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான்
கதி வேறிலை நிண்ணயங்கான்
ஏயே என்றிகழும்
உலகோடெனக் கென்னுரிமை
ஆயே உன்னையல்லால்
எனக்கார் துணை யாருறவே